[1979 மார்ச் 8

[முற்பகல் 10-00]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரத்தை நீட்டிக்கிறேன்.

திரு. என். பழனிவேல்: நான் ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் ரைஸ் பண்ணுகிறேன். அரிசன நலத்தைப் பற்றிய கேள்விக்கு நீங்கள் இரண்டு நிமிடம் கூட அனுமதிக்கவில்லை. வேறு சிலருக்கு இரண்டு நிமிடங்களுக்கு மேல் பேச அனுமதி கொடுத்திருக்கிறீர்கள். இப்பொழுது கேள்வி நேரத்தை நீட்டித்து இருக்கிறீர்கள். உங்கள் நேரத்தை நான் வீணாக்க விரும்பவில்லை. உங்கள் சிரமத்தை நாங்கள் புரிந்து கொண்டிருக்கிறோம். ஆனால், நீங்கள் தான் எங்களை அனுமதிக்கவில்லை. எங்கள் உணர்வுகளைப் புரிந்து கொள்ளவில்லை. 10 மணிக்கு கேள்வி நேரம் முடிகிறதென்றால், அதைச் சரியாக 10 மணிக்கு முடித்து விட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அப்படிச் சொன்னால், நான் மற்ற வினாக்களுக்கான விடைகளை நடவடிக்கைக் குறிப்பில் அச்சடித்துக் கொடுத்து விடுகிறேன்.

தேனியில் பணி நிலையம் அமைத்தல்

*வினா எண். 292—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு வேளாண்மை—பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977–78 பட்ஜெட்டில் குறிப்பிட்டபடி, தேனியில் கட்டப்பட வேண்டிய Service shed-ம், திண்டுக்கல்லில் கிணறுகளை ஆழந்தோண்டும் பணிகளும் எந்த நிலையில் உள்ளன ?

(ஆ) அதனுடைய உபயோகம் என்ன ?

(இ) விவசாயத்திற்கு அந்தப் பகுதியில் எந்த வகையில் உபயோகப்படுகின்றன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) தேனியில் பணி நிலையத்தைக் (Service shed) கட்டி முடிப்பதற்கான வேலை பொதுப் பணித்துறையிடம் ஒப்படைக்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன. ஆனால்,

*வினா எண். 292 முதல் 297 வரை மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நடவடிக்கை குறிப்பில் அச்சிடப் பெற்றுள்ளன.

தற்போது, மேற்படி இடம் சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தினர் தங்கள் உபயோகத்திற்கு தேவையாக இருக்கிறது என்று ஆட்சேபனை எழுப்பியுள்ளதால் தற்காலிகமாக வேலை நிறுத்தப் பட்டுள்ளது.

திண்டுக்கல்லில் கிணறுகளை ஆழப்படுத்தும் பணிக்கென தனி அலுவலகம் இல்லாததால், மதுரையில் உள்ள வேளாண்மை துறையின் உதவி செயற் பொறியாளர் அலுவலகத்தில் உள்ள இயந்திரங்களைக் கொண்டு திண்டுக்கல் வட்டத்தின், விவசாயி களின் விருப்பத்திற்கிணங்க கிணறுகள் துரிதமாக ஆழப்படுத்திக் கொடுக்கப்படுகின்றன.

(ஆ) & (இ) தேனியில் பணி நிலையம் கட்டப்பட்டால் அவ்வட்டாரத்தில் உள்ள பழுது பார்க்கப்பட வேண்டிய விவ சாயிகள் பயன்படுத்தும் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் குறைந்த செலவில் காலதாமதமின்றி விரைவில் பழுது பார்த்துக் கொடுக்கப் படும்.

திருப்பூர் ஒழுங்கு முறை விற்பனைக் கூடம்

* வினா எண். 293—திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு வேளாண்மை—பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருப்பூரிலுள்ள ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தை விரிவு படுத்தவும் புதிய கோடவுன்களை கட்டவும் அரசு நட வடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் திருப்பூர் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில், 5050 டன் பெறுமான விளைபொருள்கள் வைப்பதற்காக ரூ. 19.10 இலட்சம் செலவில் கிடங்கு கட்டுவதற்காகவும், ரூ. 1 இலட்சம் செலவில் பணியாளர் குடியிருப்பில்லங்கள் கட்டுவதற்கும் உத்தேசிக்கப்பட்டிருந்தது. தற்பொழுது ரூ. 19.10 இலட்சம் செலவில் திருப்பூர் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தை விரிவு படுத்தவும் புதிய கிடங்குகள் கட்டுவதற்கும் தயாரிக்கப்பட்ட அமைப்புப் படம் மற்றும் திட்ட மதிப்பீடுகளுக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இக் கட்டிடங்கள் கட்டுவதற்கான ஆரம்ப வேலைகள் நடைபெற்றுக்